இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 15-05-2023

# எந்தக் காலத்தில் இருக்கிறார்கள்?

குழந்தைத் திருமணத்துக்கு ஆதரவாகக் கருத்துக் கூறி இருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள். நானும் குழந்தைத் திருமணம்தான் செய்து கொண்டேன் என்று சொல்லி இருப்பதெல்லாம் அவர் வகிக்கும் பதவிக்குப் பெருமை சேர்க்காது. சிலநாட்களுக்கு முன்னால் சிதம்பரம் தீட்சிதர்கள் மீது எதற்காக நடவடிக்கை எடுத்தார்கள் என்று கேட்டதும் அவர்தான்.

குற்றத்தை ஏன் தடுக்கவில்லை என்று கேட்கலாம். ஆனால் குற்றத்தை ஏன் தடுத்தீர்கள் என்று கேட்கும் கூட்டமும் இன்னமும் இந்தக் காலத்தில் இருக்கத்தான் செய்கிறது.

**ஆணுக்குத் திருமண வயது என்பது 21. பெண்ணுக்கு திருமண வயது 18. இது சட்டம். இதற்குக் குறைவான வயதில் திருமணத்தை யார், எந்த நோக்கத்துக்காகச் செய்தாலும் தவறுதான். சட்டமீறல்தான்.**

**குழந்தைத் திருமணத்தை தடை செய்யும் சட்டம் 1929ஆம் ஆண்டே நிறைவேற்றப்பட்டு விட்டது. இதன் படி பதினெட்டு வயதுக்கு உட்பட்ட பாலினத்தவர் 'மைனர்' என பொருள் படும். இந்த சட்டத்தின் படி 21 வயதுக்கு உட்பட்ட ஆண் திருமணம் செய்தாலும் தவறு. 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், 18 வயதுக்கு குறைவான பெண்ணைத் திருமணம் செய்தாலும் சட்டப்படி தவறு ஆகும்.**

**திருமணம் செய்து கொண்டவர் மட்டுமல்ல, திருமணத்தை நடத்துபவர், அதனை செய்து வைத்தவரும் சிறைத் தண்டனைக்கு உரியவர் ஆவார். இது குழந்தைத் திருமணம் அல்ல என்பதை அதை நடத்துபவர் நிரூபிக்க வேண்டும். இத்தகைய திருமணத்தை நீதிமன்றமே தடை விதிக்கலாம். இப்படி எல்லாம் சட்டம் இருக்கிறது.**

குழந்தைகளை வேலைக்கு வைப்பது சட்டப்படி குற்றம். இப்படி வேலைக்கு வைத்திருப்பவர் தண்டிக்கப்படுகிறார். அது போலத்தான் இதுவும். சிதம்பரத்தில் 13 வயது சிறுமியை 15 வயது சிறுவனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இதில் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதனை மிகப்பெரிய குற்றமாக சமூகத்தில் விவாதப் பொருளாக ஆக்கினார் ஆளுநர். விவகாரத்தின் தொடர்புடைய குழந்தைகளுக்கு இரட்டை விரல் சோதனை நடத்தப்பட்டதாகவும் சொல்லி இருந்தார். இது தொடர்பாக அரசுக்கு அவர் ஒரு கடிதம் அனுப்பி, அரசு சார்பிலும் ஒரு பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு விட்டது.

**"குழந்தைத் திருமணம் நடந்ததாகப் புகார் வந்த நிலையில் அதன் உண்மைத் தன்மையை கண்டறிந்த பிறகுதான் சிதம்பரம் நகர காவல் நிலையத்திலும் அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும் நான்கு வழக்குகள் பதியப்பட்டன. இதில் தொடர்புடைய 8 ஆண்கள், 3 பெண்கள் கைது செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்ட நான்கு சிறுமிகளில் இரண்டு சிறுமிகள் மட்டுமே மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களை இருவிரல் கன்னித்தன்மை பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை. அந்த சிறுமியர் தற்கொலை செய்ய முயன்றனர் என்பது பொய்யான தகவல். அதுபோன்ற நிகழ்வு நடந்ததாக தகவல் இல்லை. நான்கு குழந்தைத் திருமணங்கள் நடந்தது உண்மை என்பதற்கும் ஆதாரங்கள் இருந்தன என்பதால் காவல் நிலையங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது"** என்று காவல் துறை தலைமை இயக்குநர் அறிக்கை கொடுத்துள்ளார். இந்த உண்மை எதுவும் தெரிந்து கொள்ளாமல், தமிழ்நாடு அரசை குறை சொல்லும் போக்கில் குழந்தைத் திருமண சனாதன காலத்தை நியாயப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் சிலர்.

"குழந்தைத் திருமணம் நடைபெற்றதாக வந்த புகாரை அடுத்து இந்த வழக்கில் திருமணம் செய்து வைக்கப்பட்ட சிறுமியைப் பார்க்கச் சென்றோம். அப்போது, சிறுமியை மறைத்து வைத்து தீட்சிதர் தரப்பில் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை. இதையடுத்து திருமணம் நடைபெற்றதாகக் கூறப்படும் திருமண மண்டபத்திற்குச் சென்று ஆய்வு மேற்கொண்டபோது அங்கு திருமணம் நடந்ததற்கான பதிவுகள் இருந்தன. அதன் மூலமாக கடந்த 2021 ஜனவரி 25ஆம் நாளன்று அதிகாலை 4.30 முதல் 6 மணிக்கு இந்தத் திருமணத்தைச் செய்தது தெரியவந்தது." என்று அப்போதே காவல் துறை அதிகாரி சொன்னார்.

"சிதம்பரம்நடராஜர்கோவில்தீட்சிதர்கள்அவர்களது குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைத்த புகைப்பட ஆதாரம் எங்களுக்குக் கிடைத்தது. அதன்பின் சமூக நலத்துறை சார்பில் காவல் துறையிடம் புகார் அளித்தோம்," என்று புகார் அளித்த பரங்கிப்பேட்டை சமூக நலத்துறை அதிகாரி அப்போதே சொன்னார்.

இது ஏதோ தீட்சிதர்களை குறிவைத்து நடத்தப்படவில்லை. ஏனென்றால் கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு மட்டும் குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தின் கீழ் 22 வழக்குகள் பதியப்பட்டுள்ளது. அதில் 4 மட்டுமே தீட்சிதர்கள் தொடர்புடையது. எனவே எந்த தனிப்பட்ட உள்நோக்கத்துடனும் இந்தச் சட்டம் அமல்படுத்தப் படவில்லை.

**திருமணம் ஆன ஒரு மாதத்திலேயே இடுப்பு எலும்பு ஒடிந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் பெண்களின் நிலைமையை பிரிட்டிஷ் ஆட்சி ஆய்வு செய்தது. 7 வயது, 8 வயது பிள்ளைகளுக்கு திருமணம் செய்வதால் அவர்கள் இதுபோன்ற பாதிப்புகளுக்கு உள்ளாவது அறிய வந்தது. அப்போதுதான் உடலுறவுக்கு தகுதியான வயதைக் கணிப்பதற்கான ஆய்வுகள் செய்யப்பட்டன. சிறுவயதில் திருமணம் செய்து வைப்பதை புனிதமாகக் கருதிய காலமாக அது இருந்தது.**

**இதற்கு எதிராக 1891 ஆம் ஆண்டு சட்டமுன் வடிவு வைக்கப்பட்டு, 1929 செப்டம்பர் 28 அன்று நிறைவேற்றப்பட்டது. இதனால் மதத்தில் தலையிடுகிறது பிரிட்டிஷ் ஆட்சி என்று சில தேசிய தலைவர்களே சனாதனம் காக்கும் குரலை கொடுத்தார்கள். 'பூப்பெய்வதற்கு முன்னால் திருமணம் செய்ய வேண்டும் என்கிறது எங்கள் மதம்' என்று சொன்னார்கள்.**

**ஆனால் உண்மையான சமூக சீர்திருத்தவாதிகளான டாக்டர் முத்துலட்சுமி போன்றவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் இந்தச் சட்டத்தை ஆதரித்தார்கள். அச்சட்ட முன்வடிவை 'ராய் சாஹிப் ஹாபிலாஸ் சார்தா' என்னும் ராஜஸ்தான் பகுதியை சேர்ந்தவர் முன் மொழிந்தார். அதனால்தான் அச்சட்டம் 'சார்தா சட்டம்' என்று அறியப்பட்டு, காலப்போக்கில் சாரதாச் சட்டம் ஆகிவிட்டது.**

**அதன்பிறகுதான் குழந்தைத் திருமணங்கள் குறைந்தது. திருமணத்துக்குப் பிறகான பெண்கள் இறப்பும் குறைந்தது. இந்த வரலாறுகளை அறியாமல், குழந்தைத் திருமணங்களை ஆதரித்து குரல் கொடுப்பவர்களை என்ன சொல்வது?**

## கோடை விடுமுறையையொட்டி

# ஏற்காட்டில் சுற்றுலா பயணிகள் கூட்டம்!

ஏற்காடு,மே 15 -

கோடை விடுமுறையையொட்டி, குடும்பத்துடன் பொது மக்கள் சுற்றுலா தலங்களுக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

சேலம் மாவட்டம் ஏற்காட்டுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர். இதனால் தாவரவியல் பூங்கா, பக்கோடா பாய்ண்ட், அண்ணா பூங்கா, மான் பூங்கா, லேடீஸ் சீட், ஜென்ஸ் சீட் உள்ளிட்ட பகுதிகளில் சுற்றுலா பயணிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

இங்கு பல்வேறு விளையாட்டு பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளன. இதனால் இங்குள்ள ஊஞ்சல்கள், சறுக்குகள் உள்ளிட்டவைகளில் சிறுவர், சிறுமிகள் விளையாடி மகிழ்ந்தனர்.

ஏற்காடு ஏரியில் குவிந்த சுற்றுலா பயணிகள் குடும்பத்தோடு படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். இதனால், படகு குலாம் களை கட்டியது. குழுவாக வந்திருந்த பயணிகள் மேற்கூரையுடன் கூடிய மோட்டார் படகுகளில் குதூகலமாக சவாரி செய்தனர். மேலும், மிதி படகு, பெடல் படகுகளில் பயணிக்க ஆர்வத்துடன் காத்திருந்து, சவாரி செய்து மகிழ்ந்தனர்.

கோடை விழாவையொட்டி ஆண்டுதோறும் மே மாதத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் மலர் கண்காட்சி நடத்தப்படுவது வழக்கம். கண்காட்சியை காண பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் இந்த பூங்காவிற்கு வந்து செல்வது வழக்கம். இது மட்டுமின்றி உள்ளூர் மக்களின் முக்கிய பொழுதுபோக்கு அம்சமாக அண்ணா பூங்கா விளங்கி வருகிறது. மே மாதம் நடைபெறும் கோடை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான மலர் கண்காட்சிக்கு பூங்காவை தயார்படுத்தும் பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதற்காக பூங்காவில் உள்ள இருக்கைகள், ஊஞ்சல்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என அனைத்திலும் தொழிலாளர்கள் வர்ணம் பூசும் பணியில் ஈடுபட்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திராவிடச் சூரியன் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மா.சீனிவாசா தொகுத்த "இந்தியாவின் முதன்மை முதல்வர் மு.க.ஸ்டாலின்" என்ற நூலினை வெளியிட, கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் பெற்று கொண்டார்.

## பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி - 5 நாட்களாக நடைபெற்று வந்த

# ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டம் வாபஸ்!

## அமைச்சர் க.பொன்முடியுடன் நடந்த பேச்சுவார்த்தையடுத்து சுமூக முடிவு!

சென்னை, மே 15 -

உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடியுடன் நடந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து, 5 நாட்களாக நடைபெற்று வந்த உண்ணாவிரத போராட்டத்தை ஆசிரியர்கள் வாபஸ் பெற்றுள்ளனர்.

2013ம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு பணி வழங்கும் வகையில், அரசாணை எண் 149ஐ ரத்து செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி ஆசிரியர்கள் சென்னை, நுங்கம்பாக்கம் பள்ளி கல்வி துறை வளாகத்தில் கடந்த 5 நாட்களாக தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பேச்சுவார்த்தைக்கு வரும்படி தலைமை செயலகத்துக்கு உயர் கல்வி அமைச்சர் க.பொன்முடி பேச்சுவார்த்தை அழைத்தார்.

**அமைச்சர் க.பொன்முடி பேட்டி!**

பின்னர் உயர்கல்வி துறை அமைச்சர் க.பொன்முடி நிருபர்களிடம் கூறியதாவது:

பள்ளி ஆசிரியர்கள் 9 ஆயிரம் பேரை நியமிக்க வேண்டும் என்பது பள்ளி கல்வி துறை உத்தரவு பிறப்பித்துள்ளது. டெட் தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதால் எங்களுக்கு நுழைவுத்தேர்வு நடத்தக்கூடாது. டெட் மதிப்பெண் மற்றும் மூப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்ய வேண்டும் என்று கோரினர்.

பள்ளி கல்வி துறை அமைச்சர் இங்கு இல்லாததால், முதல்வர் என்னை அவர்களுடன் பேசும்படி உத்தரவிட்டார். எனவே போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் நான் பேசினேன்.

கலைஞர் ஆட்சியில் அவர்களுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு 57ஆக இருந்தது. கடந்த ஆட்சியில் அதை 47ஆக குறைத்துவிட்டனர். அந்த வயது வரம்பை உயர்த்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து சட்டத்துறையில் சில பிரச்சினைகள் இருப்பதாக அறிகிறேன். எனவே வக்கீல்களை அழைத்து பேசி இன்னும் ஒரு வாரத்தில் அதற்கான முடிவு அறிவிக்கப்படும். மேலும் அவர்களுக்கு வேண்டியதை முதல்வர் செய்வார் என்ற உறுதியையும் அவர்களுக்கு அளித்துள்ளேன். அந்த உறுதியை ஏற்று உண்ணாவிரத போராட்டத்தை நிறுத்திக் கொள்வார்கள்.

பொறியியல் கல்வி சேர்க்கைக்கு 90 ஆயிரம் விண்ணப்பங்கள் முன்பே வந்தன. பிளஸ் 2 தேர்வு முடிவு சமீபத்தில் வந்திருப்பதால் அந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை மேலும் உயரும். ஜூன் 4ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். எனவே மேலும் பல விண்ணப்பங்கள் வரும்.

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஒரே மாதிரியான பாடத்திட்டம், கட்டணம், ஊதியம் போன்றவை நிர்ணயிக்கப்படும் என்று ஏற்கனவே கூறியிருக்கி றேன். அதுபற்றிய அறிவிப்பும் மிக விரைவில் வரும்.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி கூறினார்.

## கர்நாடக மாநிலத் தேர்தல் முடிவு என்பது

# அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான முன்னோட்டமாகும்!

## விவசாயிகள்- தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, மே 15-

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை வருமாறு:-

கர்நாடக மாநிலத்தில் அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெற்றதில், பெருவாரியான தொகுதியில் காங்கிரஸ் வெற்றி பெற்று கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைய உள்ளது தேசிய அளவில் மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும். இந்த மகத்தான வெற்றியை பெற்றுள்ள கர்நாடக காங்கிரஸ் கட்சியினருக்கு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தத் தேர்தலில் தனது பின்னடைவை உணர்ந்த காரணத்தினால் ஒரு நாட்டின் பிரதமர் அவர்கள் பல நாட்கள் கர்நாடக மாநிலத்தில் பிரச்சாரங்களை மேற்கொண்டார். ரோட் ஷோ நடத்தினார். மலை மலையாக மலர்களைக் கொண்டு வந்து சாலை முழுவதும் தூவினார்கள். பேரணி நடத்திப் பார்த்தார்கள். பொதுக்கூட்டத்தில் பேசிப் பார்த்தார். மத வெறியை



தூண்டும் விதத்தில் பிரதமர் மோடி கர்நாடகத்தில் பிரச்சாரம் மேற்கொண்டார். இவை அனைத்தும் தோல்வியை கண்டுள்ளது.

கர்நாடக மாநில மக்கள் மோடியின் வேஷத்தை தோலுரித்துக் காட்டி விட்டனர். பாரதி ஜனதா கட்சிக்குக் கொடுத்த தோல்வி என்பது ஜனநாயகத்திற்கு கிடைத்த மகத்தான வெற்றியாகும். கர்நாடக சட்டப் பேரவைத் தேர்தலின் முடிவு அடுத்தாண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான ஓர் முன்னோட்டமாகும்.

பாரதிய ஜனதா கட்சி மத்தியில் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு ஜனநாயகத்தை குழித் தோண்டி புதைத்து, சர்வாதிகாரத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் விரோத நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மக்களை மதத்தால் பிரிக்க கூடிய செயல்கள், மொழித் திணிப்பு, மாநில உரிமைகள் பறிப்பு, ஆளுநர் மூலம் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத மாநிலங்களில் இரட்டை ஆட்சி நடத்த முயற்சி - இப்படி இந்திய ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கக்கூடிய செயல்களில் தொடர்ந்து மோடி அரசு ஈடுபட்டு வருகிறது. இதற்கு முடிவு கட்டுவதற்கு அடிக்கப்பட்டிருக்கிற எச்சரிக்கை மணிதான் கர்நாடகா சட்டப்பேரவைத் தேர்தலின் முடிவாகும். இது, நாட்டின் ஜனநாயக சக்திகள் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்க கூடிய ஒன்றாகும். அந்த வகையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி இந்த முடிவை பாராட்டி வரவேற்கிறது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

## மணிமுக்தா அணையில் மீன் பிடி திருவிழா!

# 7 ஆயிரம் கிலோ மீன்கள் சிக்கின!

கள்ளக்குறிச்சி, மே 16 -

கள்ளக்குறிச்சி அருகே சூளாங்குறிச்சி கிராமத்தில் மணிமுக்தா ஆற்றின் குறுக்கே மணிமுக்தா அணை அமைந்துள்ளது. இந்த அணையில் மீன் வளர்ப்பதற்காக பொதுப்பணித்துறையினர் தனி நபரிடம் குத்தகைக்கு விட்டனர். அவரின் குத்தகை காலம் முடிந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் மணிமுக்தா அணையில் மீன் பிடி திருவிழா நடைபெற்றது. இதில் சூளாங்குறிச்சி, வாணியந்தல், ரங்கநாதபுரம், சூ.பாலப்பட்டு, அகரக் கோட்டாலம், அணை கரை கோட்டாலம் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மணிமுக்தா அணைப் பகுதியில் திரண்டனர்.

தொடர்ந்து அணையில் இறங்கி வலையை வீசி விரால், ஜிலேப்பி, கட்லா, ரோகு கெண்டை உள்ளிட்ட பல்வேறு வகையான சுமார் 7000 கிலோ மீன்களை அள்ளி சென்றனர். இதனால் இப்பகுதி திருவிழா போல காட்சியளித்தது.

